பக்கங்கள்: 06

# THEEMPUNAL
# தீம்புனல்

மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:03 | 03.11.2023 வெள்ளிக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

# வைத்தியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக இடை நிறுத்தம்



மாகாண மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சில நிமிடங்களுக்கு முன்னர் தீர்மானித்துள்ளது. அரசாங்கத்திடமிருந்து கிடைத்த சாதகமான பதில் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

வடமாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் இன்று காலை வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார அமைப்பின் வீழ்ச்சியைத் தணிக்க, நாட்டில் வைத்தியர்களை தக்கவைக்க அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மாகாண மட்டத்தில் இந்தப் பணிப் புறக்கணிப்பை ஆரம்பித்திருந்தது.

# வாகனத் தரிப்பிடத்தில் தேடுவாரற்றுக் கிடந்த 50 லட்சம் ரூபா

மாத்தறை இலங்கை வங்கியின் வாகனத் தரிப்பிடத்துக்கு அருகில் வியாழக்கிழமை (02) மாலை வீழ்ந்து கிடந்த 50 லட்சம் ரூபா பணத்தைக் கண்ட கூரியர் சேவை நிறுவனம் ஒன்றின் உதவி முகாமையாளரான சந்தன உதயங்க (38) என்பவர் அதனை வங்கியிடம் ஒப்படைத்துள்ளார். (பக்:02)

# யாழ்ப்பாணத்தில் இந்திய நிதியமைச்சர்

உத்தியோகபூர்வ விஜமாக இலங்கைக்கு வந்துள்ள இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண கலாசார மண்டபம், யாழ்.நூலகம், தூதுவர் கோபால் பாக்லே, இலங்கை வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உள்ளிட்ட இந்திய உயர்மட்டக் குழு வருகை தந்தனர். வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.



வரலாற்று புகழ்பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கும் விஜயம் செய்தார்.

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் இந்திய எம்.சாள்ஸ், யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஆகியோர் அவர்களை வரவேற்றனர்.

# எகிப்தில் தஞ்சமடைந்த 11 இலங்கையர்கள்

காஸா பகுதியில் தங்கியிருந்த 11 இலங்கையர்கள் தற்போது எகிப்தை வந்தடைந்துள்ளதாக பாலஸ்தீனத்தில் உள்ள இலங்கைப் பிரதிநிதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அவர்கள் ரஃபா நுழைவாயில் வழியாக எகிப்துக்கு வந்து தற்போது அந்நாட்டில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருப்பதாகவும் அவர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை எகிப்தில் உள்ள இலங்கை தூதரகம் மேற்கொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

17 இலங்கையர்கள் காஸா பகுதியில் தங்கியிருந்ததாகவும் அப்பகுதியில் நிலவும் பாதுகாப்பின்மை காரணமாக அவர்களில் நால்வர் தங்கியிருந்த இடத்தை விட்டு வெளியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அமைச்சர் சனத் நிஷாந்த பொலன்நறுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

கடந்த அரசாங்கங்களின் போது அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த நாட்டு மக்களுக்காகவும் எதிர்கால சந்ததியினருக்காகவும் அந்தக் கஷ்டங்களை தாங்குவேன் என்றும் தற்போதைய

# படுதோல்வியை விசாரிக்க இலங்கை கிரிக்கெட் முடிவு

உலகக்கிண்ணத் தொடரில் இந்தியாவிடம் ஏற்பட்ட தோல்வி குறித்து பயிற்சியாளர்கள், தேர்வுக் குழுவிடம் விசாரிக்க இலங்கைக் கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

எந்த அடிப்படையில் நேற்று அணித்தேர்வு நடத்தப்பட்டது என்று இதன் போது விசாரிக்கவுள்ளதாக இலங்கை கிரிக்கெட்டின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிரான போட்டியில் தனஞ்சய டி சில்வா நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக துஷான் ஹேமந்த அழைக்கப்பட்டமை பிரச்சினைக்குரிய விடயம் என அவர் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் குறித்தும், இந்தப் போட்டியில் இலங்கை அணி வெளிப்படுத்திய மோசமான ஆட்டத்திறன் குறித்தும் விசாரிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

# மிகவும் கஷ்டத்துடனேயே வாழ்கிறேன் – சனத் நிஷாந்த



அமைச்சர்களுக்கான வசதிகள் இல்லை எனவும் உத்தியோகபூர்வ காரை பராமரிக்க அமைச்சுகளிடம் பணம் இல்லை, இராஜாங்க ளுக்கு சிறப்புரிமைகள் இருந்ததாக தாம் கேள்விப்பட்ட போதிலும், தற்போதைய அமைச்சர்கள் மிகவும் கஷ்டமான வாழ்க்கை வாழ்கின்றனர் எனவும் அமைச்சர்கள் நாட்டை கட்டியெழுப்புவதற்காக தமது வாழ்வை அர்ப்பணிப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

## வாகனத் தரிப்பிடத்தில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வங்கி ஊழியர்கள் ஏ.ரி.எம்களுக்கு எடுத்துச் சென்ற அல்லது மத்திய வங்கியில் வைப்பிலிட எடுத்துச் சென்ற 50 லட்சம் ரூபா பணமே வீழ்ந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

குவியல் குவியலாக தரையில் வீழ்ந்து காணப்பட்ட 50 லட்சம் ரூபா பெறுமதியான நோட்டுகளைப் போட்டோ எடுத்து, பின்னர் இது தொடர்பில் பாதுகாப்பு அதிகாரிக்கு தெரிவித்து வங்கி அதிகாரியை அழைத்து அவர்களிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சரியான முடிவை மக்களே எடுக்க வேண்டும்-சஜித்

நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால், பொருளாதாரம் விரிவாக்கப்பட வேண்டும். தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத்தைச் சுருக்கி வருகிறது. பெறுமதி சேர் வரி அதிகரிக்கப்பட்டு, போலியான புள்ளி விபரங்களையும் தரவுகளையும் முன்வைத்து மூன்றாவது தடவையாகவும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை சுருக்கி ஒரு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்று வில்கமுவ, உடுவெல ஸ்ரீ தர்ம விஜய பௌத்த நிலையத்தில் நேற்று (02) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், டொலர் பற்றாக்குறைக்கும் ரூபாவின் பற்றாக்குறைக்கும் தீர்வு காணாத, நாட்டையே அழிவின் விளிம்பிற்கு கொண்டு சென்ற சக்திகளை, 2019 ஆம் ஆண்டு ஏமாந்ததைப் போல மீண்டும் ஆட்சிக்குக்கொண்டு வந்து ஏமாறக்கூடாது. டொலர் தட்டுப்பாடு, ரூபா தட்டுப்பாடு என்ற இரண்டு நிதிப் பிரச்சினைகளைத் தீர்க்க, சரியான அணி எது என்பதை மக்கள் புத்திசாலித்தனமாக முடிவுசெய்ய வேண்டும். பொய்யான வீராப்பு காட்டுவதைக் கொண்டு ஏமாறுவதை விடுத்து, மீண்டும் மீண்டும் ஏமாறாமல், வறுமையை ஒழித்து அபிமானம் மிக்க மக்கள் வாழ்வை நோக்கி நகர்வதற்கும், கிராமத்தைக் கட்டியெழுப்பி நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் சரியான முடிவை மக்களே எடுக்க வேண்டும். மாற்றத்தை மக்களே காண்பிக்க வேண்டும்.

திருட்டு மற்றும் மோசடி மூலம் நாட்டின் வளங்களை உற்ற நண்பர்களுக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் பகிர்ந்தளிப்பதைவிட அப்பாவி ஏழை மக்களுக்கு ஏதாவது பகிர்ந்தளிப்பது பெறுமதியானது என்றும், இந்தப் பகிர்ந்தளிப்பு நிரந்தரமான பகிர்ந்தளிப்பு அல்லவெனவும், இதன் மூலம் மக்கள் முன்னேற்றமடைய பாடுபட வேண்டும் என்றார்.




# எலான் மஸ்க் மகனின் பெயர் சந்திரசேகர்

டெஸ்லா உரிமையாளர் எலான் மஸ்க் தனது மகனுக்கு சந்திரசேகர் என்று பெயர் வைத்துள்ளதாக மத்திய அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் தனது சமூக வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் அமெரிக்கா சென்றிருந்தபோது டெஸ்லா உரிமையாளர் எலான் மாஸ்க் அவர்களை சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது நடந்த உரையாடல் குறித்து அவர் தனது சமூக வலைத்தளத்தில் பதிவு செய்துள்ளார். எலான் மஸ்க் தனது மகனுக்கு சிவோன் சந்திர சேகர் ஜிலேஸ் என்ற பெயர் வைத்துள்ளதாகவும் நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானியான பேராசிரியர் சந்திரசேகர் தன்னை மிகவும் கவர்ந்தவர் என்பதால் அவரது பெயரை தனது மகனின் பெயரின் நடுவில் வைத்துள்ளதாகக் கூறியதாகவும் ராஜீவ் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

1983 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி சந்திரசேகர் பெயரை அப்போதே பலர் இந்தியாவில் தங்கள் குழந்தைகளுக்கு வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் எலான் மஸ்க்கும் தனது மகனுக்கு இந்திய விஞ்ஞானியின் பெயரை வைத்துள்ளது பெருமைக்குரியதாக கருதப்படுகிறது.

## காஸாவை சூழ்ந்த இஸ்ரேல் இராணுவப் படை



காஸா மீதான தரைவழி தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது. இதனால் போர் தீவிரமடையும் அபாயம் அதிகரித்துள்ளது.

வடக்கு காஸாவில் உள்ள பாலஸ்தீனியர்கள் உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் பலமுறை எச்சரிக்கைவிடுத்த போதிலும், ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் அப்பகுதியை விட்டு வெளியேறவில்லை. அதோடு, போர் நிறுத்தம் என்பது இஸ்ரேல், ஹமாஸிடம் சரணடைவதற்கு சமமானது. ஹமாஸூக்கு எதிரான போரில் வெற்றிபெறும் வரை இஸ்ரேல் போராடும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், இது தொடர்பாக இஸ்ரேல் இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி, இஸ்ரேல் இராணுவ வீரர்கள் காஸா பகுதியை சுற்றி வளைத்து விட்டதாகவும், இனி போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடம் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார்.



## பாகிஸ்தானில் பொதுத் தேர்தல்

பாகிஸ்தான் பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி நடைபெறும் என்று அந்நாட்டின் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் பிரதமராக இருந்த ஷபாஸ் ஷெரீப் தலைமையிலான அரசு, பாராளுமன்றத்தை கடந்த ஆகஸ்ட் 9 ஆம் திகதி கலைத்தது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட 90 நாட்களில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது விதி என்பதால், அதை உறுதிப்படுத்த வலியுறுத்தி பலரும் அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி காஜி ஃபயஸ் இசா, நீதிபதிகள் அதார் மினால்லா, நீதிபதி அமின் உத்தின் கான் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் இரண்டாவது நாளாக விசாரணைக்கு வந்தது.

அப்போது, பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் சஜீல் ஸ்வாதி, 'தற்போது தொகுதி மறுவரையறை செய்யும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தப்பணிகள் வரும் 30 ஆம் திகதி நிறைவடையும். இதையடுத்து, தொகுதிகளை உறுதிப்படுத்தும் பணி ஜனவரி 29 ஆம் திகதிக்குள் நிறைவடையும். இதனையடுத்து, பெப்ரவரி 11 ஆம் திகதி பொதுத் தேர்தலை தேர்தல் ஆணையம் நடத்தும்' என தெரிவித்தார்.

# அப்பிள் ஐபோன் விற்பனை கடும் சரிவு



உலகம் முழுவதும் வாடிக்கையாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ள அப்பிள் ஐபோன் விற்பனை நான்காவது காலாண்டில் மிகப் பெரிய அளவில் சரிந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

சர்வதேச அளவில் புகழ்பெற்ற அப்பிள் நிறுவனம் ஐபோன், லேப்டாப், ஐபேட் உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்து வருகிறது. குறிப்பாக, அப்பிள் ஐபோன்கள் ஹைடெக் பாதுகாப்பு வசதி இருக்கும் என்பதால் வி.ஐ.பிகள், அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் ஆகியோர் அப்பிள் நிறுவன ஐபோன்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் அப்பிள் ஐபோன்களுக்கு நல்ல வரவேற்பு இருந்த நிலையில் ஜூலை முதல் செப்ரெம்பர் காலத்திலான காலாண்டில் 10% குறைந்துள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது. இந்த ஒரே காலாண்டில் சுமார் 90 மில்லியன் டொலர் விற்பனை குறைந்துள்ளதாக தெரிகிறது.

சீனாவில் அரசு ஊழியர்கள் அப்பிள் ஐபோன் பயன்படுத்த தடை என்று அந்நாட்டு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளதால்தான் ஐபோன் விற்பனை சரிந்துள்ளதாகக்கூறப்படுகிறது.

## காஸாபோரை சில நாட்களுக்குள் நிறுத்த வேண்டும் பைடன் வலியுறுத்தல்

காஸா போரை சில நாட்களுக்கு நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த மாதம் 7 ஆம் திகதி இஸ்ரேலின் தெற்கு பகுதி நகரங்களில் பாலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 1,400 இற்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். 5,000இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இதற்கு பதிலடியாக ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக இஸ்ரேல் இராணுவம் போர் தொடுத்து வருகிறது. வடக்கு காஸா பகுதியில் தரைவழித் தாக்குதலையும் தொடங்கியுள்ளது.

'இஸ்ரேல் இராணுவ தாக்குதல்களில் இதுவரை 9,061 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 3,760 பேர் குழந்தைகள், 2,326 பேர் பெண்கள். இதுவரை சுமார் 22,000 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக' பாலஸ்தீன சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

## இஸ்ரேலுடனான தொடர்பை தடை செய்யும் துனிஷியா

இஸ்ரேலுடனான இணக்கமான உறவை குற்றமாக்கும் சட்ட மசோதா குறித்து துனிஷியா விவாதிக்கிறது. இதன்மூலம் ஜியோனிஸ்ட் அமைப்பை அங்கீகரிப்பது அல்லது அதனுடன் நேரடி அல்லது மறைமுக உறவுகளை ஏற்படுத்துவது தடை செய்யப்படும். இந்த வரைவானது ஜியோனிஸ்ட் உடன் நேரடி -மறைமுக உறவுகளை ஏற்படுத்தல் என்பது உயர் தேசத்துரோகம் என வகைப்படுத்தப்படும் குற்றம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# உயிருடன் விளையாடும் கும்பல்

சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவின் கூற்றுப்படி, ஒரு வருடத்தில் அதிக எண்ணிக்கையிலான மருந்துகளின் தரத் தோல்விகளைப் பதிவு செய்து, 2023 ஆம் ஆண்டில் மொத்தம் 100 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளன.

தர சோதனையில் தோல்வியடைந்த மருந்துகளில், 52 மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை, 40 மருந்துகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை, மற்றவை சீனா, பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து வந்தவை.

தரப் பரிசோதனையில் தோல்வியடைந்ததாகக் கண்டறியப்பட்ட மருந்துகளில், சில திரும்பப் பெறப்பட்டன அல்லது நிறுத்தப்பட்டுள்ளன. தவிர, மொத்தம் 35 பேட்ச்கள் Flucloxacillin Cap திரும்பப்பெறப்பட்டது. இது 2017 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை அதிகபட்ச எண்ணிக்கையைப்பதிவு செய்துள்ளது.

குறிப்பிட்ட மருந்து இரத்மலானையில் உள்ள அரச மருந்து உற்பத்தி கூட்டுத் தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் கூற்றுப்படி, 2017 ஆம் ஆண்டிலிருந்து மொத்தம் 600 தரக் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் 96 வழக்குகள் பதிவாகியுள்ளன, 2022 ஆம் ஆண்டில் 86 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்தன.

தரமற்ற ஹியூமன் இம்யூனோகுளோபியுலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் மருந்துகளை நாட்டுக்கு இறக்குமதி செய்ததாகக் கூறப்படும் நிறுவனத்தின் உரிமையாளர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார். ரத்தொலுகம பகுதியைச் சேர்ந்த 57 வயதான ஒருவர் கொள்ளுப்பிட்டியில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

போலியான ஆவணங்களை சமர்ப்பித்து இந்தியாவில் இருந்து இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி குப்பிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் குறித்த நிறுவனத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட இந்திய நிறுவனத்துடனான தகவல் பரிமாற்றத்தின் மூலம், குறித்த நிறுவனம் இலங்கை அல்லது வேறு எந்த நாட்டிற்கும் மருந்துகளை ஏற்றுமதி செய்யவில்லை என தெரியவந்துள்ளது.

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட நிறுவனத்தின் உரிமையாளருக்கும், இந்த மோசடி செயலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மேலும் இரண்டு அரசு உயர் அதிகாரிகளுக்கும் திங்களன்று வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டது. குறித்த சந்தேக நபர்கள் நாட்டை விட்டு தப்பிச் செல்ல தயாராகி வருவதாக சி.ஐ.டியினர் பிரேரணை மூலம் முன்வைத்த உண்மைகளை கருத்திற்கொண்ட மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த மாதத் தொடக்கத்தில், உரிய நடைமுறையை மீறி இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இம்யூனோகுளோபுலின் குப்பிகளின் ஒரு தொகுதி பயன்பாட்டிலிருந்து இடைநிறுத்தப்பட்டதாக NMRA குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் 22, செப்ரெம்பர் 16 ஆகிய திகதிகளில் முறையே கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் மாத்தளை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் பல நோயாளிகளுக்கு இந்த மருந்து வழங்கப்பட்டதன் பின்னர் ஒவ்வாமை எதிர்வினைகள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கும்பலில் மேலும் பலர் இருக்கலாம்.

அவர்களும் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட வேண்டும்.

# பொருளாதார நெருக்கடிக்குள் நாடு தள்ளப்படுவதை தடுக்க சரியான முடிவுகளை எடுக்க வேண்டும் ஜனாதிபதி



யாசகம் செய்யும் நாட்டுக்குப் பதிலாக வலுவான பொருளாதாரத்தை கொண்ட நாடொன்றை கட்டியெழுப்புவது எந்த அளவு கடினமாக இருந்தாலும் அதற்கு அவசியமான தீர்மானங்களை தற்காலத்தில் உரிய வகையில் மேற்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாமரைத் தடாக அரங்கத்தில் கடந்த புதன்கிழமை (01) நடைபெற்ற தொழிற்சாலைகளுக்கான, தேசிய கைத்தொழில் விருது விழா 2023 இல் கலந்துகொண்டிருந்தபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சரிவடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் திட்டத்தை நாம் வகுத்துள்ளோம். அதுகுறித்து சர்வதேச நாணய கடன் மற்றும் வட்டியை செலுத்துவதற்கான ஒதுக்கீடுகளை அடுத்த வரவுசெலவுத் திட்டத்தில் மேற்கொள்ளவிருக்கிறோம். கடனை செலுத்தாதிருந்தால் நாம் மீண்டும் பழைய நிலைக்குச் செல்வோம், எமது ரூபாவின் தரத்தையும் பேணிக்கொண்டு கடன்களை செலுத்த வேண்டும்.

கடந்த காலங்களில் வரவுசெலவுத் திட்டத்திற்கு தேவையான நிதி இல்லாத போது மத்திய வங்கியில் பணம் அச்சிடப்பட்டது. ஆனால், இப்போது அதை செய்ய முடியாதென சட்டரீதியாகவே தடைபோடப்பட்டுள்ளது. வங்கிக் கடன்களையும் பெறமுடியாது. கடந்த காலங்களின் காணப்பட்ட முறையற்ற நிதிச் செயற்பாடுகளே அதற்கு காரணமாகும். அடுத்த வருடத்தில் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும். அதற்குரிய இலக்குகளை நோக்கி பயணிக்க வேண்டும்.

தொடர்ச்சியாக நாம் யாசகம் பெறும் நாடாக இருக்க முடியாது. நாம் எமது வலுவுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும். கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் விருப்பமில்லாமல் சில தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. பலர் விமர்சித்தாலும் அதனை செய்திருக்காவிட்டால் நாடு மீண்டும் கடந்த வருடத்திலிருந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும். இவ் வருடத்தில் +7 ஆக எமது பொருளாதார வளர்ச்சி காணப்படுகின்றது. இன்றளவில் நூற்றுக்கு +5 ஆக காணப்படுகின்றது. அதனால் நாம் தொடர்ச்சியாக முன்னோக்கிச் செல்வதா? பின்னோக்கி நகர்வதா? என்பதை தீர்மானிக்க வேண்டும்.

எவ்வாறாயினும் நாட்டை முன்னேற்றும் தீர்மானத்துடன் முன்னோக்கிச் செல்வோம். அதனால் யாசகம் பெறும் நாட்டுக்கு மாறான சிறந்த நாடொன்றை கட்டியெழுப்ப முடியும். இந்நாட்டுக்கு நல்ல எதிர்காலம் இருக்குமென நான் கருதுகிறேன். உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கிறோம். தற்போது நெருக்கடியாக இருந்தாலும் இன்னும் இரண்டு, மூன்று வருடங்களில் சுமூகமாக நிலைமை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதற்காக, 21 பிரதான தொழில் துறைகள் மற்றும் 61 உப தொழில் துறைகளை சேர்ந்த 4000க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில் அவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்த 300 தொழில் முனைவோருக்கு பிளாட்டினம் தங்க விருதுகளும், வெள்ளி மற்றும் வெண்கல விருதுகள் வழங்கப்பட்டன.

# பொலிஸ் மா அதிபரின் சேவை நீடிப்பு

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மேலும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன இந்த சேவை நீடிப்பு பெறுவது இது நான்காவது முறையா



கும். இதற்கு முன்னர் சி.டி. விக்ரமரத்னவுக்கு மூன்று மாதங்கள் இரண்டு முறை மூன்று வாரங்கள் சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. மூன்று வார கால சேவை நீடிப்புகடந்த வியாழக்கிழமையுடன் முடிவடைந்தது.

# 3 மாதங்களுக்குள் 3,000 கிராம உத்தியோகத்தர்கள்

கிராம உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்பட்டு மூன்று மாதங்களுக்குள் நியமனங்கள் பூர்த்தி செய்யப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தன வவுனியா மாவட்ட உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் வவுனியா மாவட்ட செயலகத்தில் "புதிய கிராமம் - புதிய நாடு" தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன்



இணைந்து நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

கிராம உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் உள்ள தொலைதூர பிரதேசங்களில் விசேட தகைமையின் அடிப்படையில் பரீட்சையை நடாத்திய பின்னர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என பிரதமர் மேலும் தெரிவித்தார்.

# கல்முனையில் மருத்துவருக்கான மருத்துவ ஆய்வுகூடம் திறந்து வைப்பு

கல்முனை பிராந்தியத்துக்கான மருத்துவ ஆய்வு கூடம் பாலமுனை பிரதேச வைத்தியசாலை கட்டடத்தில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரனால் திறந்து வைக்கப்பட்டது.

மிகக் குறைந்தளவிலான நிதியைக்கொண்டும் பிராந்திய சுகாதார நிறுவனங்களிலுள்ள வளங்களைக் கொண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த பிராந்திய ஆய்வுகூடத்தில் பிராந்திய வைத்தியசாலைகளில் எடுக்கப்படுகின்ற நோயாளர்களின் குருதி மற்றும் மாதிரிகள் பரிசோதனை செய்யப்படவுள்ளது. குறிப்பாக, இங்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் அறிக்கைகள் உரிய நேரத்துக்குள் சம்மந்தப்பட்ட நோயாளிகளுக்கு Online (email, whatsapp) மற்றும் குறுஞ்செய்தி ஊடாகவும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.



இந்த ஆய்வுகூடத்தின் ஊடாக பிராந்திய மக்கள் பெரிதும் நன்மையடையவுள்ளனர்.

இலங்கையில் முதலாவது பிராந்திய ஆய்வுகூடத்தினை கல்முனை பிராந்தியத்திலே திறந்து வைத்ததன் மூலம் தேசிய ரீதியில் கல்முனை சுகாதார சேவைகள் பணிமனை முக்கியத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய சமூகப் புலனாய்வு பிரிவொன்று ஆரம்பம்

தேசிய புலனாய்வு பிரிவுடன் இணைந்து புதிய சமூக புலனாய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் செயற்பாடுகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் புதிய புலனாய்வுப் பிரிவினூடாக பாடசாலைகளில் இடம்பெறும் பல்வேறு முறைகேடுகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்,

"இந்த ஆண்டு தேசிய புலனாய்வுப்பிரிவு மற்றும் தேசிய கேடட் கார்ப்ஸ் (National Cadet Corps) இணைந்து சமூகப்புலனாய்வு பிரிவை நிறுவ முடிவு செய்துள்ளோம். அந்தத் திட்டத்தை இந்த ஆண்டு தொடங்கினோம். இதன்படி, பாடசாலைகளில் இடம்பெறும் தவறான செயல்கள், போதைப் பொருள் அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கும் அகற்றுவதற்கும், முதலில் அவற்றை ஒழிப்பதற்கும் இந்த நுண்ணறிவைப் பயன்படுத்த முடியும். மேலும், இளைஞர்களிடம் இருந்து தேசிய வீராங்கனைகளை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

# தமிழ்ச்செல்வனின் நினைவேந்தல்!



விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று மாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண தலைமையகத்தில் இடம்பெற்றது.

இதன்போது அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி, ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், த.தே.ம.முன்னணியின் மகளிர் அணித்தலைவி வாசுகி சுதாகரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் தீப்பந்தப் போராட்டம்

மின்சாரக்கட்டண அதிகரிப்பு, எரிபொருள் அதிகரிப்பு ஆகியவற்றுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நடத்திய தீப்பந்தப் போராட்டம் நேற்று வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் கொல்லங்கலட்டி பகுதியில் இருந்து கீரிமலை சிவன் கோவில் வரை முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியினர், இளைஞர்கள், யுவதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# போதைப் பொருளுடன் ஒருவர் மன்னாரில் கைது

மன்னார் தாராபுரம் கிராமத்துக்கு அருகாமையில் கடந்த புதன் கிழமை (01) இரவு 9 மணியளவில் மேற்கொண்ட சோதனையின் போது போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மன்னார் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது இச்சந்தேக நபர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

மன்னார் தாழ்வுபாடு பகுதியிலிருந்து தாராபுரத்திற்கு இப்போதைப் பொருளைக் கொண்டு வந்த வேளையில் இந்த நபர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இப்போதைப்பொருள் மாத்திரைகள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கொண்டு வந்துள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.



கைது செய்யப்பட்ட சந்தேக நபரும் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் மாத்திரைகளையும் மேலதிக விசாரணைக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கில் பல்கலைக்கழக ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

பல்கலைக்கழக ஊழியர்களும் பல்கலைக்கழக சமூகமும் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த வியாழக்கிழமை (2) கிழக்குப் பல்கலைக்கழக அரசடி வளாகத்தின் முன்னால் பல்கலைக்கழக ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.



பல்கலைக்கழக ஊழியர் சங்கம், கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கம் என்பன இணைந்து ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்தன. மட்டக்களப்பு கல்முனை வீதியிலுள்ள அரசடியிலுள்ள பல்கலைக்கழக வளாகத்திற்கு முன்னாள் நூற்றுக்கு மேற்பட்ட பல்கலைக்கழக ஊழியர்கள் காலை 10 மணிக்கு நடத்திய ஆர்ப்பாட்டம் ஒரு மணித்தியாலயத்தில் நிறைவடைந்தது.

# பலோன் டி'ஓர் விருதை கௌரவிக்கும் மோதிரங்கள்




லியோனல் மெஸ்ஸியின் வரலாற்றுச் சிறப்புமிக்க எட்டாவது பலோன் டி'ஓர் விருதைக் கொண்டாடும் வகையில், 36 வயதான ஆர்ஜென்ரீனா கால்பந்து வீரர், பாரிஸில் நடைபெற்ற ஆடம்பர விழாவில் எட்டு நேர்த்தியான தங்க மோதிரங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

விளையாட்டு ஆடை நிறுவனமான அடிடாஸ், மெஸ்ஸிக்கு இந்த 14 கரட் தங்க மோதிரங்களை வழங்கியது. இது அவரது புகழ்பெற்ற வாழ்க்கை முழுவதும் அவரது ஒவ்வொரு பலோன் டி'ஓர் வெற்றிகளையும் குறிக்கும். இந்தத் தனித்துவமான மற்றும் விலைமதிப்பற்ற மோதிரங்கள் விரைவில் ஏலத்திற்கு செல்லும் என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன, அங்கு ரசிகர்கள் மற்றும் சேகரிப்பாளர்கள் மெஸ்ஸியின் அசாதாரண சாதனைகளின் சின்னத்தை வைத்திருக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

இந்த மோதிரங்கள் ஒவ்வொன்றும் மெஸ்ஸியின் அசாதாரண பயணத்தின் முக்கிய தருணங்களை விவரிக்கும் ஒரு தனித்துவமான கல்வெட்டைக் கொண்டுள்ளது. இவற்றில், ஒரு மோதிரம் மூன்று நட்சத்திரங்களைக் கொண்டுள்ளது, இது ஆர்ஜென்ரீனா தேசிய அணியின் வரலாற்று வெற்றிகளைக் குறிக்கிறது. மற்றொரு மோதிரம் '91' என்ற எண்ணைக் காட்டுகிறது, இது காலண்டர் ஆண்டு கோல்கள் சாதனையை முறியடித்த மெஸ்ஸியின் குறிப்பிடத்தக்க சாதனையைக் குறிக்கிறது.

# இந்தியா சரித்திர சாதனை வெற்றி




மும்பையில் வான்கடே மைதானத்தில் நடந்த உலகக்கிண்ண லீக் போட்டியில் இலங்கைக்கு எதிராக விளையாடிய இந்தியா 302 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரை இறுதிக்குள் நுழைந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி களத்தடுப்புச் செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 20 ஓவர்களில் எட்டு விக்கெட்களை இழந்து 357 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை அணி 19.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 57 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.

இந்தியாவுக்கு கப்டன் ரோஹித் சர்மா முதல் ஓவரிலேயே 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். விராட் கோலியுடன் ஜோடி சேர்ந்த மற்றொரு துவக்க வீரர் கில் மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். பவர் பிளே கடந்தும் 30 ஓவர்கள் வரை நிதானமாகவும் அதிரடியாகவும் விளையாடிய இந்த ஜோடியில் இருவருமே அரை சதம் கடந்து 2ஆவது விக்கெட்டுக்கு 189 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து இந்தியாவுக்கு வலுவான அடித்தளத்தை அமைத்தனர். சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட சுப்மன் கில் 11 பவுண்டரி 2 சிக்ஸருடன் 92 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்த சில ஓவரிலேயே விராட் கோலியும் 11 பவுண்டரிகளுடன் 88 ஓட்டங்களில் வெளியேறினார்.

ஸ்ரேயாஸ் ஐயர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய நிலையில் அவருடன் 4 ஆவது விக்கெட்டுக்கு 60 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த கே.எல்.ராகுல் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சூரியகுமார் யாதவ் மீண்டும் 12 ஓட்டங்களில் ஆட்டமிழக்க தொடர்ந்து அசத்திய ஸ்ரேயாஸ் ஐயர் 3 பவுண்டரி 6 சிக்ஸருடன் 82 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். ரவீந்திர ஜடேஜா தன்னுடைய பங்கிற்கு 35 (24) ஓட்டங்கள் எடுத்ததால் 50 ஓவர்களில் இந்தியா எட்டு விக்கெட்களை இழந்து 357 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை சார்பில் அதிகபட்சமாக மதுசங்கா 5 விக்கெட்டுகளை சாய்த்தார்.

358 என்ற கடினமான இலக்கை துரத்திய இலங்கைக்கு முதல் ஓவரின் முதல் பந்திலேயே பும்ரா வேகத்தில் துவக்க வீரர் நிசங்க கோல்டன் டக் அவுட்டாக்க அடுத்த ஓவரின் முதல் பந்திலேயே சிராஜ் வேகத்தில் மற்றொரு துவக்க வீரர் கருணரத்னவும் கோல்டன் டக் அவுட்டானார். அந்த நிலைமையில் வந்த சமரவிக்கிரமவையும் டக் அவுட்டாகிய முகமது சிராஜ் கப்டன் குசால் மெண்டிசையும் 1 ஓட்டத்தில் போல்டாக்கினார். அதனால் 4 விக்கெட்களை இழந்து 3 ஓட்டங்கள் எடுத்து ஆரம்பத்திலேயே மோசமான துவக்கத்தைப் பெற்ற இலங்கையை அனுபவ வீரர் ஏஞ்சலோ மேத்யூஸ் காப்பாற்ற போராடிய போதிலும் எதிர்ப்புறம் அசலங்கா 1, ஹேமந்தா 0 ஷமி வேகத்தில் தாக்குப்பிடிக்க முடியாமல் திரும்பினார்கள். இறுதியில் மேத் தியூஸ் 12, சமீரா 0, தீக்சனா 1, ரஜிதா 14, மதுசங்கா 5 ஓட்டங்கள் எடுத்த போதிலும் 19.4 ஓவரிலேயே இலங்கையை கிட்டத்தட்ட 2023 ஆசிய கோப்பை இறுதிப் போட்டி போல 57 ஓட்டங்களுக்கு சுருட்டிய இந்தியா 302 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று அரை இறுதிக்கு முதல் அணியாக அதிகாரபூர்வமாகத் தகுதி பெற்றுள்ளது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 03.11.2023 அன்று வெளியிடப்பட்டது.